**வத்தேகம நகர சபை**
**கண்டி மாவட்டம்**

-------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 23 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 23 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 மே 31 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் வத்தேகம நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 209,990 பெறுமதியான 02 வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | மேலும் கண்டறிந்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | கடந்த வருடங்களின் முற்கொடுப்பனவுகளின் கூட்டுத் தொகை ரூபா 563,628 கணக்குகளில் செம்மையாக்கம் செய்யப்படவில்லை. | கணக்குகளில் செம்மையாக்கல் செய்து சரியான கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டும். | இம் மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iv) | மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்காக கணக்குகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டி இருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கூட்டுத் தொகை ரூபா 64,863,864 ஆன 05 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் உபயோகப் பதிவேட்டில் காட்டப்படும் மீதிகளிற்கிடையில் ரூபா 3,879,276 வித்தியாசம் ஆனது. | குறித்த மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன் |

**(இ) பெற வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதி திகதியன்று பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 5,500,261 ஆனதுடன், அவற்றில் 1–5 ஆண்டுகளிற்கு இடையிலான காலத்தை விஞ்சிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 281,714 உம் 5 ஆண்டுகளிற்கும் அதிக காலத்தை விஞ்சிய ரூபா 2,015,653 மீதியுமானது. | பெற வேண்டிய மீதிகளை அறவிட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 7,727,572 பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பான அட்டவனைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் கணக்கு மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | 2018 ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் சபை நிதியத்தினால் வீட்டுத் தோட்ட உரிமையாளர்ளுக்கு பகிர்ந்தளிக்க 1500 ஏற்றுமதி பயிர்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அவற்றில் 1057 பயிர்களை விநியோகித்தமை | பயிர்களை, களஞ்சியத்தில் பொருப்பேற்று முறையாக விநியோகித்து விநியோகத்தின் பின்னர் | விடய பொருப்பு அலுவலர் இடமாற்றப்பட்டுள்ளார். அவரை அழைத்து தகவல்களை பெற்று கணக்காய்வு ஐயவினாவிற்று பதில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | |
|---|---|
| தொடர்பான எவ்வித தகவல்களும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. அங்கத்தவர்கள் ஊடாக 443 பயிர்களை குறைவருமான மக்களுக்கு வழங்க விநியோகிக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் 208 பயிர்களை பயன்பாட்டாளர்களுக்கு பகிர்தளித்ததற்கான சான்றுகள் சமர்பிக்கப்படவில்லை. | உருதிப்படுத்தல் பெற்றுக் கொண்டு பின்னூட்டல் செயற்பாடு மேற்கொள்ள வேண்டும். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைதுவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (2) பிரிவு. | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கை சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களுடன் செயலாற்றுகை அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 237 (ஆ) | ரூபா 57,500 பெறுமதியான நாற்றுகளை கொள்வனவு செய்கையில் களஞ்சிய ஏடுகளில் நாற்றுக்கள் பெறுவனவு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமான ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவறுதளாக இருப்பு பதிவேட்டில் உட்படுத்த முடியாதிருந்தது என அறிவிக்கிறேன். |
| (இ) | 2008 திசெம்பர் 31 திகதிய பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் இலக்கம் 30/2008 கொண்ட சுற்றறிக்கை. | ரூபா 250,000 இனை விஞ்சி இடர் கடன் செலுத்த முடியாத போதும், அத் தொகையை விஞ்சி ரூபா 130,000 இடர் கடன் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 1,082,004 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 13,212,819 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 18,995,250 | 5,666,614 | 4,653,400 | 3,328,303 | 15,284,500 | 16,807,420 | 11,687,897 | 5,119,523 |
| (ii) | வாடகை | 5,816,500 | 6,003,902 | 5,823,682 | 215,358 | 6,162,400 | 5,262,080 | 5,022,080 | 239,809 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,060,000 | 890,100 | 890,100 | 6,000 | 1,021,000 | 1,011,150 | 1,006,150 | 5,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 2,189,000 | 15,695,330 | 10,750,426 | 7,088,893 | 2,154,500 | 2,613,700 | 2,613,700 | 2,000,000 |
| | | 28,060,750 | 28,255,946 | 22,117,608 | 10,638,554 | 24,622,400 | 25,694,350 | 20,329,827 | 7,364,332 |

#### 2.2.2 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நீர் கட்டணம்**<br>மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை நீர் கட்டண மீதி ரூபா 4,208,589 ஆனதுடன், உடன்படிக்கை பிரகாரம் செயற்பட்டு, அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் நிலுவை கட்டணம் அறவிட முடியவில்லை என அறிவிக்கிறேன். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,925,504 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 954,800 தொகை ஆனது. | விறைவில் சபைக்கு அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடப்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை செய்வதற்காக உப விதிகள் விதிக்கபட வேண்டிய போதும் 10 விடயங்களிற்கு மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | சபைக்கு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக் கூடிய விடயங்கள் தொடர்பாக உப விதிகளை விதித்து வருமானம் ஈட்டிக் கொள்ள வேண்டும். | முக்கியமான உப விதிகளிற்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

#### (ஆ) திண்மக் கழிவு முகாமைதுவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் சேர்க்கப்படும் உக்கலடையும் கழிவுப் பொருட்களில் ½ டொன் அளவு, உக்கலடையாத குப்பைகளை முறையாக முகாமை செய்திருக்காததுடன், கலந்து கொண்டுவரப்படும் கழிவுகள் துன்லுய கும்புற காணியில் திறந்த வெளியல் இடப்பட்டிருந்தது. | ஒழுங்காக கழிவுப் பொருட்களை முகாமை செய்ய வேண்டும். | தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்க இலக்குகளை போதியளவு இனங்கண்டிருக்காததுடன், அது தொடர்பாக போதிய கடமைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு அவற்றை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு முன்னேற்றத்தை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | சபையிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார கணக்கிலுள்ள ரூபா 1,270,178 மீதியை நகர அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நகர அபிவிருத்தி வேலையொன்றில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நகரை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண கருத்திட்டம் ஒன்றை உத்தேசித்த போதும் 2019 ஆண்டு நடைமுறையாகவில்லை என அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2013 ஆண்டு வீதவரி மதிப்பீட்டின் மீது 2019 ஆண்டிலும் வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | வீதவரி ஒவ்வொறு 5 ஆண்டுகளிலும் மதிப்பீடு செய்யப்பட்டு கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஜனவரி 01 திகதியிற்கு வீதவரி மீள்திருத்தம் ஒன்றை மேற்கொள்ள மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (இ) | பழைய சபை கட்டிடத்தின் கீழ் மாடியை குத்தகையிற்கு வழங்கி ரூபா 195,913 ஆன நிலுவை குத்தகை அறவிடப்பட்டு இருக்கவில்லை. இக் கட்டிடம் 2018 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாதது காணப்பட்டது. | நிலுவை பணம் அறவிடப்பட வேண்டியதுடன் அனைத்து சொத்துக்களையும் பயன்படுத்த வேண்டும். | அலுவலகம் மற்றும் கடைத் தொகுதியொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | குடுகல பாதையில் 10 குறை வாடகை வீடுகளிலிருந்து 1992 மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டிருந்ததுடன் 2010 ஆண்டின் புதிய மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தாததால் சபை நிதியத்திற்கு ரூபா 449,970 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் வாடகையை திருத்திக் கொள்ள வேண்டும். | 2010 மற்றும் 2019 ஆண்டுகளில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்ப்பின் காரணமாக 2010 ஆண்டு மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தாது முன்னைய கட்டணத்தை அறவிடுமாறு உள்ளூராட்சி ஆணையாளர் ஆலோசனை வழங்கியுள்ளார். 2019 மதிப்பீட்டை நடைமுறைப்படுத்தாது |

| | | | |
|---|---|---|---|
| | | | முன்னைய கட்டணத்தை அறவிட மகாசபை அங்கீகாரம் கிடைத்துள்ளது என அறிவிக்கிறேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆளணியில் 6 பதவிகளில் 7 வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்கள் நிரப்ப நடவடிக்கை எடுக்க வெண்டும். | ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது என அறிவிக்கிறேன். |
| (ஆ) | இடம் மாறிச் சென்ற 05 அலுவலர்களிடமிருந்து அறவிடப்படாத ரூபா 558,621 ஆன கடன் மீதி நிலவியது. | ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வெண்டும். | அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | வத்தேகம நகர சபையின் 3 பதவிகளில் 3 வெற்றிடங்களிற்கு ஆட்சேர்க்கும் போது சட்ட, விதிகளிற்கு அமைய புள்ளிகள் வழங்கப்படாமை, தொண்டர் அடிப்படையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளமை, போலியான சேவை சான்றிதழ்களிற்கு புள்ளிகள் வழங்கப்பட்டமை காரணமாக சபையில் சேவை புரிந்த ஊழியர்களிற்கு மற்றும் நகர சபை அதிகார எல்லையிலுள்ளவர்களுக்கு அநீதி ஏற்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு மேற்கொள்கையில் வெளிப்படை தன்மையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நேர்முக பரிசோதனை சபையொன்றினால் புள்ளிகள் வழங்கப்பட்டு ஆட்சேர்க்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 08 1/2 ஏக்கர் அளவிலான தெல்கஹகந்த காணியில் தந்போது 30 வீடுகளில் 10 வீடுகள் தொடர்பாக எவ்வித பணமும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2015 ஆண்டளவில் பணம் செலுத்திய காணி சொந்தக்காரர்களிற்கு உருதி வழங்க நடவடிக்கை எடுக்காததால் 2019 மதிப்பீட்டின் பிரகாரம் பர்சஸ 1 இற்கு ரூபா 100,000 ஆனதில் காணியை ஒப்படைப்பது பிரச்சினைக்குரிய நிலமைக்கு ஆகியிருந்தது. | முறையாக பணம் அறவிட்டு சட்ட ரீதியாக காணிகளை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக மதிப்பிற்குரிய ஆளுனரின் அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. அவ் அங்கீகாரம் கிடைத்தவுடன் இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியும் என அறிவிக்கிறேன். |

## 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2016 பெப்ரவரி 03 திகதி 7 உப மென்பொருள்களுடன் கூடிய மென்பொருள் தொகுதியொன்றை நிருவ நிறுவனமொன்றுடன், உடன்படிக்கை செய்து அவற்றில் வீதவரி மற்றும் நீர் மென்பொருள் மாத்திரம் நிருவப்பட்டிருந்ததுடன் உடன்பட்ட பெறுமதியில் 68 சதவீதமான ரூபா 445,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த விளைவுகள் கிடைத்திருக்கதில்லை. | இத் தொகுதியை செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவர தேவையான பௌதீக மற்றும் மனித வளத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். | 7 மென்பொருள்களுடன் கூடிய இத் தொகுதி நிருவப்பட்டு 100 சதவீதம் வெற்றிகரமாக செயற்படுகிறது. பயிற்றப்பட்ட அலுவலர்கள் இடமாற்றிச் சென்றமை, பிரசவ விடுமுறை மற்றும் போதியளவு கணனிகள் இல்லாமையின் மீது செயற்பாட்டு நிலையில் இல்லை என அறிவிக்கிறேன். |

## 3.6 சொத்துக்கள் முகாமைதுவம்

### விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 333,700 பெறுமதியான தச்சு இயந்திரங்கள் மற்றும் ரூபா 129,500 பெறுமயான மின்பிறப்பாக்கி இயந்திரம் பயன்படுத்த்ப்படாது விளைவற்று நிலவின. | பயன்படுத்த முடியாத பண்டங்களை மதிப்பிட்டு பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 பண்டக கணிப்பீட்டில் விற்பனைக்கு உகந்தது என தீரமானிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணய்விற்கு அலுவலளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதும் போதியளவான உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும். | போதியளவான உள்ளக கணக்காய்வு ஒன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |